(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 287.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூலை 10, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1850/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த 5 வருடங்களின்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 பாரிய அளவிலான செலவு அதிகரிப்புகளை துறைமுக மற்றும் வருட வாரியாகவும்;

(ii) மேற்படி (i) இனைத் தீர்மானிப்பதற்கு சகல பகுதிகளையும் ஒன்றுசேர்ப்பதன் கூட்டுவிளைவையும்;

(iii) செலவு அதிகரிப்பு விகிதாசாரத்திற்கேற்ப வருமான அதிகரிப்பு காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், இக்குறைபாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 6 வருடங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் ஒருவருக்கான வருமானம், செலவு, இலாபம் மற்றும் சேர்பெறுமதி ஆகியவற்றை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1895/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய கல்வி வலயத்திற்குரியதாயிருந்த யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயம் மூடப்பட்டு பல வருடங்கள் ஆகின்றனவென்பதையும்;

(ii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவிருந்த சில கட்டிடங்கள் தற்போது அழிவுற்று வருகின்றனவென்பதையும்;

(iii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாக சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பு உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவுள்ள கட்டிடங்கள் மற்றும் நிலப்பரப்பு என்பவற்றை அழிவுற இடமளிப்பது பெரும் தவறாகும் என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்திற்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்தி கைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பித்து பிரதேசவாழ் மக்களின் தொழில் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலையின் வளங்களை மேலே முன்மொழியப்பட்டவாறு பயன்படுத்துவதற்கு திட்டமிடுவாரா என்பதையும்;

(ii) இன்றேல், பயனுள்ள வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2214/ '12

3.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) இற்றைவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள மேற்படி மாடி வீடுகளின் எண்ணிகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2270/ '12

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் நத்தார் தினத்தன்றோ அல்லது அண்மித்த தினமொன்றிலோ தங்காலை பிரதேசத்தின் விடுமுறை விடுதியொன்றில் வெளிநாட்டவரொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், படுகொலைக்கு உள்ளானவரது பெயர் மற்றும் நாடு யாது என்பதையும்;

(iii) மேற்படி படுகொலைக்கான சந்தேக நபர்கள் இனங் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iv) இவர்கள் வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி படுகொலை சம்பந்தமாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி படுகொலை காரணமாக இலங்கைக்கு சர்வதேச ரீதியில் எதிர்நோக்க நேரிட்டுள்ள நிலைமை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2537/ '12

5.

கௌரவ அநுர திசாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையினை அரச தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு மேலதிகமாக தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு வழங்குவதன் அடிப்படை யாது;

(ii) கடந்த தினம் இடம்பெற்ற கொமன் வெல்த் பாங்க் (Common Wealth Bank) கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியை இலங்கையில் ஒளிபரப்பிய தொலைக்காட்சி அலைவரிசை யாது;

(iii) மேற்படி அலைவரிசையை அதற்கெனத் தெரிவு செய்ததன் அடிப்படை யாது;

(iv) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்புவதற்கு அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3061/ '12

6.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஹொறனை, மத்துகமை மற்றும் களுத்துறை ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அனேக பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகள் நிதியின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்தில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணிப்புக்காக அரசாங்கம் ஒதுக்கிய நிதிக்கு என்ன நடைபெற்றது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் தேவையான நிதித்தொகை யாது;

(iv) உரிய நிதி ஏற்பாடுகளை விரைவில் ஒதுக்கீடு செய்து, குறித்த பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3065/ '12

7\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படவேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அங்கத்தவர்களுக்குரிய கடமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அங்கத்தவர்களை நியமிக்கும் பொறுப்பு அரசியலமைப்பின் மூலம் யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) இன்றேல், இந்தச் சட்டப் பொறுப்புக்களைப் புறக்கணிப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2441/ '12

8\.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வலா திட்டத்தின் முதற் கட்டத்திற்காக திட்டமிடப்பட்ட அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களும் தற்போது முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி திட்டத்தின் முதற் கட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படாத அபிவிருத்திப் பணிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைகளை முடிப்பதற்கான நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2576/ '12

9\.

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கம நெகும" நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக தற்போது நடைமுறைப் படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் உள்ளடங்குகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி கருத்திட்டங்களுக்கு செலவிடப்படுகின்ற மொத்தப் பணத் தொகை மில்லியன்களில் எவ்வளவு;

(iv) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் அளவுகோள் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2858/ '12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) விளையாட்டு மற்றும் அது தொடர்புடைய செயற்பாடுகளை ஒளிபரப்புவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஊடக நிறுவனமொன்று இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அத்தகைய நிறுவனத்தின் பெயரையும்;

(iii) சிரச, சுவர்ணவாஹினிய, தெரண, ஐ.ரி.என்., ரூபவாஹினி போன்ற தொலைக்காட்சி நிலையங்கள், விளையாட்டுக்களை ஒளிபரப்புவதற்கான உரிமைகளுக்கு விண்ணப்பித்துள்ளனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) எப்போது கூட்டிணைக்கப்பட்டது என்பதையும்;

(ii) 2012.06.01 திகதியில் உள்ளவாறு பிரதம நிறைவேற்று அதிகாரியையும் தற்போதுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியையும்;

(iii) கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) அரசாங்க ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளதா;

(iv) ஆமெனில், அவ் ஒப்பந்தங்கள் யாவை

என்பதை அவர் கூறுவாரா?

(இ) (i) அரச நிறுவனங்களிடமிருந்து கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) பெற்றுக்கொண்ட விளம்பரங்களையும்;

(ii) அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றினால் கால்டன் விளையாட்டு அலைவரிசையில் வர்த்தக விளம்பரங்களை ஒளிபரப்புதவதற்கு CSN நிறுவனம் ஆரம்பம் முதல் இற்றைவரை மாதாந்தம் மேற்கொண்டுள்ள செலவினங்கள் யாவை;

(iii) கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) விளம்பரம் செய்யும் 10 பாரிய அரச நிறுவனங்களையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

2871/ '12

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள்,

(i) இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(ii) உற்பத்தி செய்யப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டுகள் யாவையென்பதையும்;

(iv) இவற்றுக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவாத கால வரையறை (Warranty period) யாதென்பதையும்;

(v) மேற்படி இயந்திரங்களுக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவாதச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த காலங்களில் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் செயலிழந்தமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் உயர்ந்தபட்ச மின்சக்தியின் அளவு எத்தனை மெகாவோட்கள் என்பதையும்;

(iii) மேற்படி உயர்ந்தபட்ச மின்சக்தி தேசிய மின்சக்தி கட்டமைப்புக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3164/ '12

12.

கௌரவ பாலித தெவரப்பெரும,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மத்துகம புனித மேரி வீதி என முன்பு அழைக்கப்பட்ட தற்போதைய குமார வெல்கம மாவத்தையில் 1991ஆம் ஆண்டு தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டு பின்னர் 2005.03.30ஆம் திகதி பிரதேச சபை அங்கீகாரத்தின் படி நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டு மின்சாரத்தையும் பெற்றிருந்த 70 கடைகள் திடீரென உடைத்து அகற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக 70 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தற்போது நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) புதிய கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதேச சபையானது ஒவ்வொரு கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 100,000.00 முற்பணத் தொகையைப் பெற்றுள்ளதென்பதையும்;

(iv) புதிய கடைகளை நிர்மாணிப்பதற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான காணியொன்றில் மண் பரிசோதனை நடைபெற்றுள்ள போதிலும் இதுவரை இவை நிர்மாணிக்கப்பட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்படாதமையினால் அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கடைகளை உடைத்து அகற்றுவதற்கு ஆலோசனை வழங்கியோர் யாவர் என்பதையும்;

(ii) புதிய கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அறவிடப்பட்ட முற்பணத் தொகை சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) புதிய கடைகள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) கடைகளை இழந்த வியாபாரிகளுக்கு புதிய கடைகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3406/ '12

13.

கௌரவ சாந்த பண்டார,— பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் அலவ்வ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய ஹூம்புலுவ கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் புராதன குளமொன்று அமைந்துள்ளதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி குளத்தின் ஒரு பகுதி நிரப்பப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி குளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் பெரும் எண்ணிக்கையான விவசாயிகளுக்கு நன்மை பயக்குமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குளம் அமைந்துள்ள காணி யாருக்கு உரித்தாயுள்ளது என்பதையும்;

(ii) உரிமையாளர்கள் இருப்பின், அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3435/ '13

14.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சவூதி அரேபியாவின் ரியாதில் வீட்டுப் பணிப்பெண்ணாக சேவையாற்றிவிட்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள கொம்பனித்தெருவைச் சேர்ந்த திருமதி அன்வர் சியானா வெளியிட்டுள்ள தகவல்களுக்கு அமைய அந்நாட்டில் சிறைவைக்கப்பட்டுள்ள இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் சுமார் 50 பேர் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அது தொடர்பாக கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களை விடுவித்து உடனடியாக இலங்கைக்கு அழைத்துவருவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வீட்டுப் பணிப்பெண்களை அநாதரவான நிலையில் கைவிடுவதற்குச் செயற்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் அதற்குப் பங்களிப்புச் செய்துள்ள ஏனையோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பெண்களது குடும்பங்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்றை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக சீனாவிடமிருந்து மேலதிகமாக 153 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கடன் எந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் (வட்டி வீதம், கால எல்லை, வேறு கட்டணங்கள்) கீழ் பெற்றுக்கெள்ளப்பட்டது என்பதையும்;

(ii) எவ்வங்கியிடமிருந்து இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் தரகர்கள் சம்பந்தப்பட்டிருப்பின் அவர்கள் உள்நாட்டவர்களா அல்லது வெளிநாட்டவர்களா என்பதையும்;

(iii) அனைத்து மூலங்களிலிருந்தும் இதுவரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் மற்றும் அவை ஒவ்வொன்றினும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கடன் நிபந்தனைகள் மூல ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதன் பின்னர் எப்போதாவது மாற்றப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்),— (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர், மற்றும் உறுப்பினர்கள் என்ற பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

### பிரேரணை முன்னறிவித்தல்

2.

கௌரவ ஜானக பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இர/குருவிட்ட மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ திலங்க சுமதிபால,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2013 சனவரி 22 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2013.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

17.

அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.